## இளைஞர்களும், தன்னார்வலர்களும் பங்களிப்பை வழங்க வேண்டும்!

# ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு பாராட்டுக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப். 3 -

ஏரிகளை சீரமைத்து வரும் நிமல் ராகவனுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் இதுபோன்று நம் இளைஞர்களும், தன்னார்வலர்களும் தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலை களைச் சீரமைத்திட வேண்டும் எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இளம் வயதிலேயே பொதுச் சிந்தனையுடன் ஏரிகளைச் சீரமைத்து வரும் நிமல் ராகவன் அவர்களுக்குப் பாராட்டுகள்! எடுத்துக்காட்டெனச் செயல்பட்டு இளைஞர்களுக்கு நல்வழிகாட்டும் அவருக்கு வாழ்த்துகள்!**

**நீர்நிலைகளைத் தூர்வாருதல் – பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் என்பது நீர் மேலாண்மையில் முக்கியமானது. தற்போது கூட நமது அரசின் சார்பில் 2,473 ஏரிகள், 344 அணைக்கட்டுகள், 4,879 கி.மீ வரத்துக் கால்வாய்கள், கால்வாய்கள் / ஆறுகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**நீர்நிலைப் பகுதிகளில் குப்பைகள் மற்றும் கழிவுகளைக் கொட்டுவதைப் பொதுமக்கள் தவிர்த்திட வேண்டும். நமது இளைஞர்களும் – தன்னார்வலர்களும் – சூழலியல் அமைப்புகளும் நிமல் ராகவன் போன்று**




**தத்தமது பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைச் சீரமைத்திட வேண்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## இளையான்குடி – மெய்யனேந்தல் – கிராமத்திற்கு கூடுதல் பேருந்து தேவை!

# மானாமதுரை தொகுதிக்கு அரசு கலைக் கல்லூரி அளித்த முதல்வருக்கு நன்றி!

## சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தில் மானாமதுரை ஆ.தமிழரசி பேச்சு!

சென்னை, ஏப். 3 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது மானாமதுரை தொகுதி உறுப்பினர் ஆ.தமிழரசி இளையான்குடி ஒன்றியம், அ.மெய்யனேந்தல் கிராமத்திற்கு கூடுதல் பேருந்து இயக்க வேண்டும் என்று கேட்டதுடன் மானாமதுரை தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

இளையான்குடி ஒன்றியம், அ. மெய்யனேந்தல் கிராமத்திற்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு முன் வருமா?

இளையான்குடி ஒன்றியம், அ. மெய்யனேந்தல் கிராமத்திற்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், பரமக்குடி கிளை சார்பாக அரசுப் பேருந்துகளும், சிற்றுந்து களும் போதுமான அளவிற்கு இயக்கப்பட்டு வருகின்றன .



**ஆ. தமிழரசி:** இளையான்குடி ஒன்றியத்திற்குட்பட்ட அ. மெய்யனேந்தல் ஊராட்சியைச் சுற்றி அதிகமான கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் தங்களுடைய அத்தியாவசியத் தேவைக்காகவும், மருத்துவ வசதிக்காகவும், பள்ளிக்கூட வசதிக்காவும், அலுவலகப் பணிக்காகவும் பரமக்குடியிலிருந்து இளையான்குடி வழியாகச் செல்ல வேண்டியிருக்கிறது. பரக்குடி செல்கின்ற அந்த வழித்தடங்களில் மட்டுமே 2 முறை பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அது போதுமான அளவில் இல்லை என்பதால், பரமக்குடி, முள்ளிய னேந்தல், கிருஷ்ணாபுரம், நெடுங்குளம், அதிகரை, லெட்சுமிபுரம், மெய்யனேந்தல், நடுவலசை, கீழாயூர், இளையான்குடி வழியாக 6 நடைகளாவது பேருந்துகளை இயக்க நடவடிக்கை வேண்டும் என்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மெய்யனேந்தல் கிராமம் இளையான்குடியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அங்கே பள்ளி மாணவர்கள் பள்ளி செல்வதற்கு வசதியாக காலை 720 மணிக்கும், மாலை 5.50 மணிக்கும் தடம் எண்கள் 15 மற்றும் 37 ஆகிய பேருந்துகள் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. உறுப்பினர் அவர்கள், இந்த வசதி போதாது என்று தெரிவிக்கின்ற காரணத்தால், இன்னும் கூடுதலாக இரண்டு நடைகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆ. தமிழரசி:** இரண்டு வழித்தடங்கள் என்பது போதாது. இன்னும் கூடுதலாக இரண்டு வழித்தடங்கள் சேர்த்து பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாட்டுத்தாவணி முக்குடி, பெரியார் நிலையம் மறவனேந்தல், பெரியார் நிலையம்வடுவன்குளம், பெரியார் நிலையம்பாட்டம், மதுரை தூதை, சிவகங்கை மானாமதுரை, சிவகங்கைவாகுடி, விளத்தூர், கட்டிக்குளம் வழியாக பேருந்து கள் இயக்க புதிய வழித்தடங்களை ஏற்படுத்தித் தர வேண்டும் .

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கீழடி நான்குவழிச் சாலையில் ஒரு நிழற்குடை கட்டப்பட்டுள்ளது. மதுரைராமேஸ்வரம் செல்கின்ற அனைத்துப் பேருந்துகளையும் அந்த நிழற்குடை அமைந்துள்ள பேருந்து நிறுத்தத்தில் நிறுத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்..

என்னுடைய மானாமதுரை தொகுதியில் தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள், ஓர் அரசு கலைக் கல்லூரி தந்திருக்கிறார்; எங்களுடைய இளந்தலைவர் துணை முதலமைச்சர் அவர்கள், mini stadium ஒன்று தந்திருக்கிறார்கள். இதனால், எனது தொகுதி மக்களெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். இதற்காக தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில், பழுதடைந்த பேருந்துகளெல்லாம் என்னுடைய தொகுதியைச் சுற்றிலும் இயக்கப்படுகின்றன. அமைச்சர் அவர்கள் அந்த பழுதடைந்த பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள், மதுரையிலிருந்து அவருடைய தொகுதியின் பல்வேறு பகுதி களுக்கு கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள்.

அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, ஏற்கெனவே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பேருந்துகளை நீட்டிப் பதன் மூலமாக அந்த வசதிகளை செய்து தர முடியுமே யானால், அந்த வசதியை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று, தமிழர்களின் தொன்மை நாகரிகத்தை உலகிற்கு பறைசாற்றுகின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் கீழடியில் ஏற்படுத்தப்பட்ட அருங்காட்சியகத்தையொட்டி அமைந்துள்ள பேருந்து நிறு த்தத்தில் பேருந்துகளை நிறுத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருடைய தொகுதியில் இயங்குகின்ற பழைய பேருந்துகளை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறைக்குப் புத்துயிர் ஊட்டுகின்ற வகையில், தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் புதிய பேருந்துகளை வாங்க அறிவிப்பு கொடுத்து, அதற்கான tender விடப்பட்டு, தற்போது தமிழ்நாடு முழுவதும் 3,500 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. மீதி பேருந்துகள் படிப்படியாகத் தயாரிக்கப்பட்டு, கூடு கட்டும் பணி முடிவு பெற்று வந்துக்கொண்டிருக்கிறது. சமீபத்தில்கூட முதலமைச்சர் அவர்கள் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்திருந்தபோது 105 பேருந்துகளை அங்கே கொடியசைத்துத் துவக்கி வைத்தார். எனவே, ஒவ்வொரு வாரத்திலும் புதிய, புதிய பேருந்துகள் வந்துக் கொண்டிருக்கின்றன. பழைய பேருந்துகள் அவற்றின் மூலமாக மாற்றி இயக்கப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கழகத் தலைவர், தலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர சுற்றுச்சூழல் அணி சார்பில் ஆதரவற்ற முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி மாநகர சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரெ.சகாய மைக்கேல் ராஜன் தலைமையில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மருத்துவர் எஸ்.வி. ஆனந்த் முன்னிலையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ப.ஆனந்த், ஆர்.சதாசிவன், த.ஜீவா, மு.சேக்மீரான், எம்.அலெக்ஸ், ரா.கணேசன், த.குமார், சொ.ராஜா, பீ.ஆன்றனி பபின், சொ.சுரேஷ், அ.அனனியாஸ், முகம்மது பஷீர், கோ.ராதாகிருஷ்ணன் உட்பட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. மாதவன்

### ஏப்ரல் 3 (2018)



**திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.**

**1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கிய காரணமாக இருந்தவர்.**

**அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறை அமைச்சராக பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்தி காட்டியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## உசிலம்பட்டி நகர் கழகம் சார்பில்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## 1500 பேருக்கு எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் தலைமையில் சேடபட்டி மு.மணிமாறன் - தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை!

மதுரை, ஏப். 3–

மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டி நகரக் கழகத்தின் சார்பாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி 1500 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை நகர செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் தலைமையில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினர்.

அதன் விபரம் வருமாறு:–

உசிலம்பட்டி நகர் கழக திமுக சார்பில் தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு மூன்று நாட்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

கிராமிய கலைஞர்கள், சலவைத் தொழிலாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் என பலருக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின் படி சுமார் 1500க்கும் மேற்பட்டவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு நகரச் செயலாளர் எஸ்.ஓ.ஆர்.தங்கப்பாண்டியன் தலைமை வகித்தார்.

நலத்திட்ட உதவிகளை மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர், தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., ஆகியோர் நேரில் வழங்கி சிறப்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் செல்லத்துரை, கழக நிர்வாகிகள் முருகன், பழனி, அஜித் பாண்டி, முத்துராமன், சுதாகரன், ஜெயச்சந்திரன், சங்கர பாண்டியன், அருள், சிவனாண்டி, விமல், வழக்கறிஞர் சரவணக்குமார், குபேந்திரன், கல்யாணி, சின்னன், ஜெயப்பிரகாஷ் மற்றும் உசிலம்பட்டி நகர்க்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,

கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், பயனாளிகள் என பெரும் திரளானோர் பங்கேற்றனர்.

## லாலா சங்கரபாண்டியன் தலைமை! சங்கரன் கோவில் தெற்கு ஒன்றியத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - பொதுக்கூட்டம்!

## ஈ.ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை! இரா.இராஜீவ்காந்தி சிறப்புரை!

தென்காசி, ஏப்.3 –

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் நாயகரின் பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் வருகிற 08.04.2025 – செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு கலைஞர் திடல் வேட்டரம்பட்டியில் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன் தலைமையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.முன்னிலை யில் நடைபெறுகிறது. இந்நிகழ்வில் மாநில மாணவர் அணி செயலாளர் இரா. ராஜீவ்காந்தி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், இளம் பேச்சாளர் ரேவதி தொகுதி பார்வையாளர்கள் தனுஷ் எம். குமார் (வாசுதேவநல்லூர்) ராமஜெயம் (சங்கரன்கோவில்) தீர்மானக் குழு உறுப்பினர் சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேல், சீனிவாசன், பரமகுரு, மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்து ச் செல்வி,

மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன், துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொருளாளர் இல.சரவணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனிமொழி, ஒன்றிய குழு துணைத் தலைவர் செல்வி, ஒன்றிய துணைச் செயலாளர்கள் நடராஜன், வைரமுத்து, மணிகண்டன், தங்கம்மாள் பொருளாளர் சண்முகையா, ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் திருமலை சாமி உள்பட பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதயகுமார் நன்றியுரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சங்கரன்கோவில் தெற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றியக் குழுத் தலைவர் லாலா சங்கர பாண்டியன் செய்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கல்லணை காத்தான்

### ஏப்ரல் 3 (2005)



**தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**